# මුස්ලිම් ආගමික හා සංස්කෘතික කටයුතු දෙපාර්තමේන්තුව
# முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்
# Department of Muslim Religious and Cultural Affairs.

## කාර්ය සාධන වාර්තාව - 2017
## முன்னேற்ற அறிக்கை - 2017
## Annual Performance Report – 2017



වැය ශීර්ෂය - 202
**செலவினத் தலைப்பு - 202**
**Expenditure Head - 202**


**முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்**
**180, டி.பி. ஜாயா மாவத்தை**
**கொழும்பு-10**


«««««««««««««««««««««««««««★»»»»»»»»»»»»»»»»»»»»»»»»»»»

## இலக்கு

இலங்கை நாட்டுக்குள் இஸ்லாமிய கலாசார விழுமியங்கள் நிறைந்த
ஒரு முஸ்லிம் சமூகத்தை உருவாக்கல்.

## நோக்கம்

இலங்கை வாழ் முஸ்லிம் சமுதாயத்தின் உயர்வுக்காவும், நலன் கருதியும் சகல நடவடிக்கைகளையும் ஒன்றிணைத்து முஸ்லிம் சமய கலாச்சார ஸ்தாபனங்களை தொடர்புபடுத்தலும் அத்தோடு அமுல்படுத்தலும் மற்றும் வக்பு சட்டதிட்டங்களை அமுல்படுத்தல் மூலம் மிகவும் உன்னதமான முஸ்லிம் சமுதாயமொன்றை உருவாக்க வழிவகுத்தல்.

**பொருளடக்கம்** **பக்கம்**


01. அறிமுகம் 04

02. திணைக்களத்தின் குறிக்கோள்களும், செயற்பாடுகளும் 04 - 06

2.1. குறிக்கோள்

2.2. திணைக்களத்தின் செயற்பாடுகள்

03. ஒழுங்கமைப்பு வடிவம் 06 - 07

04. திணைக்கள உத்தியோகத்தர்கள் விபரம் 08 - 09

4.1. அனுமதிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழாம்

4.2. வருடாந்த உத்தியோகத்தர்கள் குழாம் மாற்றங்கள்

05. நிருவாக மற்றும் அபிவிருத்திப்பிரிவால் ஆற்றப்பட்ட கடமைகள் 09 - 13

5.1. நிருவாகப் பிரிவால் செய்யப்பட்ட கடமைகள்

5.1. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

5.2. வெளிநாட்டு பயிற்சித்திட்டங்கள்

5.2. அபிவிருத்திப் பிரிவால் செய்யப்பட்ட நடவடிக்கைகள்

06. நிதிப்பிரிவால் செய்யப்படும் கடமைகளும் அறிக்கைகளும் 13 - 17

6.1. நிதிப்பிரிவால் செய்யப்படும் கடமைகள்

6.2. நிதி அறிக்கைகள்

6.2.1. மீண்டுவரும் செலவினங்கள்

6.2.2. மூலதனச் செலவினங்கள்

6.2.3. முற்பணக் கணக்குகள்

07. சமய மற்றும் கலாசார பிரிவினால் நிறைவேற்றப்படும் பணிகள் 18 - 23

08. வக்பு மற்றும் பள்ளிவாசல்கள் நிருவாகப் பிரிவால் நடாத்தப்பட்ட செயல்கள் 23

09. நடைமுறைப்படுத்தப்பட்ட விசேட நடவடிக்கைகள் 24 – 25

10. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு மற்றும் புலனாய்வு பிரிவால் செய்யப்படும் நடவடிக்கைகள். 25

11. திணைக்களத்தின் கடமைச் செயற்பாட்டுக் கெதிரான தடைகளும் இடர்களும் 25

## 01. அறிமுகம்

தபால், தபால் சேவை மற்றும் முஸ்லிம் மத விவகார அமைச்சின் கீழ் இயங்கும் முஸ்லிம் சமய கலாசார அலுவலகம் முஸ்லிம்களது கலாசாரத்தினையும் பண்பாட்டினையும் விருத்தி செய்யும் ஒரு திணைக்களமாக செயற்படுகின்றது.

இலங்கையினுள் இஸ்லாமிய மத விழுமியங்கள் மற்றும் கலாசார மகிமைகளைக்கொண்ட ஒரு உன்னதமான முஸ்லிம் சமுதாயமொன்றை உருவாக்கும் இலக்கினைக்கொண்ட இத்திணைக்களம் முஸ்லிம் சமுதாயத்தின் நலன் கருதிப் பொறுப்பு வாய்ந்த ஒரு நிறுவனமாக செயற்பட்டு வருகின்றது.

1962ம் ஆண்டு 21 ம் இலக்க மற்றும் 1982ம் ஆண்டு 33ம் இலக்க சட்டத்தின் கீழ் திருத்தியமைக்கப்பட்ட 1956ஆம் ஆண்டு 51ம் இலக்க வக்ப் சட்டத்தினை இலக்காகக் கொண்டு செயற்படுத்துவதற்காக இலங்கை வக்ப் சபை மற்றும் வக்ப் நியாய சபை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இவற்றுடன் நெருங்கிய தொடர்பினை ஏற்படுத்துவதன் மூலம் வக்ப் சட்டத்தினை நோக்காகக் கொண்டு முஸ்லிம் பள்ளிவாயில்கள் மற்றும் மத ஸ்தாபனங்களை பதிவு செய்தல், பதிவு செய்யப்பட்ட முஸ்லிம் புனித ஸ்தாபனங்கள், முஸ்லிம் தரும நம்பிக்கைப் பொறுப்புக்கள் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களின் பொறுப்புக்களும், அதிகாரங்களும் செயற்பாடுகளும் முஸ்லிம் தரும நிதியங்களை சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கு உரிய நிருவாகத்தை செயற்படுத்தல் போன்ற விடயங்கள் இத்திணைக்களத்தின் செயற்பாட்டிற்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன. வக்ப் சட்டத்தில் காணப்படும் நிருவாக நடவடிக்கைகள் அனைத்தும் உள்ளடக்கியதாக முஸ்லிம் சமய பண்பாட்டின் தனித்துவத்தை பேணும் வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு மனித சமூகத்தின் நலன்கருதி அனைத்து செயலாற்றல்களையும் மேற்கொண்டு வருகின்றது.

## 02. திணைக்களத்தின் குறிக்கோள்களும், செயற்பாடுகளும்

### 2.1 குறிக்கோள் :

1. முஸ்லிம் பள்ளிவாசல்கள் தரும நம்பிக்கை நிதியங்கள் என்பவற்றின் சொத்துக்களை மேற்பார்வை செய்தல்.
2. இஸ்லாமிய நிறுவனங்களையும் அவற்றின் சொத்துக்களையும் பரிபாலித்தலும் வழிநடாத்துதலும்.
3. இஸ்லாமிய மார்க்கக் கல்வியினை வளர்த்தலும் மேம்படுத்தலும்.
4. இஸ்லாமிய கலாசார நிகழ்ச்சிகளை மேம்படுத்தலும், வளர்த்தலும்.
5. ஹஜ் கடமையினை நிறைவேற்ற செல்வோர்களது தேவைகளை பூர்த்தி செய்தல்.
6. மார்க்க விடயங்களிலும் கலாசார விடயங்களிலும் பங்களிப்புச் செய்தவர்களை கௌரவித்தல்.
7. முஸ்லிம்கள் அவர்களது மத அனுஷ்டானங்களை மேற்கொள்ள வேண்டிய ஏற்பாடுகளை செய்து கொடுத்தல் (ஐவேளை தொழுகை, நோன்பு நோற்றல்)
8. சமகால விடயங்கள் தொடர்பாக விளக்க நிகழ்சிகளை நடாத்துதலும் வழிகாட்டுதலை வழங்கலும்.

9. முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் ஒற்றுமையினை வழிப்படுத்தலும் தேசிய ஒருமைப்பாட்டிற்காக உழைத்தலும்.

## 2.2. திணைக்களத்தின் செயற்பாடுகள்

01. முஸ்லிம் பள்ளிவாசல்கள் மற்றும் மத ஸ்தாபனங்களை பதிவு செய்தலும், நம்பிக்கையாளர்களை நியமித்தலும்.

02. முஸ்லிம் பள்ளிவாசல்கள் தரும நம்பிக்கை நிதியங்கள் என்பவற்றை பரிபாலித்தல், வக்பு சட்டத்தினை நடைமுறைப்படுத்தல்.

03. பதிவு செய்யப்பட்ட முஸ்லிம் பள்ளிவாசல்கள், அஹதியா (தஹம்) பாடசாலைகள், அரபுக்கல்லூரிகள், குர்ஆன் மத்ரஸாக்கள் உள்ளிட்ட சமய நிறுவனங்களை அபிவிருத்தி செய்வதற்காக நிதி உதவிகளை வழங்குவதன் மூலம் அவற்றினை மேம்படுத்தல்.

04. புனித ரமழான் மாதத்தில் முஸ்லிம் நாடுகளில் இருந்து அன்பளிப்பாக எமது நாட்டுக்கு கிடைக்கப்பெறுகின்ற பேரீத்தம் பழங்களை மாவட்ட மட்டத்தில் உள்ள பிரதான பள்ளிவாசல்கள் மூலம் இலங்கையில் உள்ள அனைத்து முஸ்லிம்களுக்கும் கிடைக்கும் வகையில் விநியோகித்தல்.

05. தேசிய மீலாதுன் நபி தினத்தை குறிக்குமுகமாக ஒவ்வொரு வருடமும் இலங்கையில் உள்ள ஒரு மாவட்டத்தை தெரிவு செய்து அம் மாவட்டம் முழுவதும் சமய, சமூக ரீதியிலான அபிவிருத்திகளை ஏற்படுத்தல். அதில் குறித்த பிரதேசத்தில் உள்ள முஸ்லிம் பள்ளிவாசல்கள், சமய நிறுவனங்கள், முஸ்லிம்” முஸ்லிம் அல்லாத பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல், மீலாத்தின போட்டி நிகழ்ச்சிகள், வெற்றிபெற்ற போட்டியாளர்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்ச்சிகள், முன்னோடிகளையும் மத போதகர்களையும் கௌரவித்தல், அம்மாவட்ட வரலாற்றுப் புத்தக வெளியீடு, நினைவு மலர் வெளியீடு போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடாத்தப்படுகின்றன.

06. இலங்கை வாழ் முஸ்லிம்கள் புனித ஹஜ் யாத்திரையை மேற்கொள்வதற்கு தேவையான ஏற்பாடுகளை பின்வருமாறு மேற்கொள்கிறது.
    - பொருத்தமான முகவர்களை பதிவு செய்தலும், அனுமதிப்பத்திரம் வழங்களும்.
    - ஹஜ்யாத்திரிகளுக்கான வழிகாட்டல், நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்தல்.
    - ஹஜ் வழிகாட்டி புத்தக வெளியீடும், விநியோகமும்.
    - ஹஜ்யாத்திரிகளுக்கான விமான போக்குவரத்து சேவைகளை ஏற்பாடு செய்தல்.
    - ஹஜ்யாத்திரிகளுக்கு சவுதி அரேபியாவில் தரித்திருக்கும் காலப்பகுதியில் தேவையான வழிகாட்டல்களும், உதவிகளும் செய்தல்.
    - சவுதி அரேபியாவில் ஹஜ்யாத்திரிகளுக்கு தேவையான மருத்துவ வசதிகளை இலங்கை மருத்துவர்களால் வழங்குதல்.
    - விமான நிலையத்தில் ஹஜ்ஜாஜிகளுக்கான உதவிகளையும் வழிகாட்டுதல்களையும் வழங்குதல் (கட்டுநாயக – ஜித்தா)
    - ஹஜ் முகவர்கள் வழங்கும் சேவைகளை மேற்பார்வை செய்தலும், குறைகளை நிவர்த்தி செய்தலும்

07. இலங்கையில் உள்ள அஹதியா பாடசாலை ஆசிரியர்களுக்கான சீருடை வழங்கல், புத்தகக் கொடுப்பனவு என்பன வழங்குவதுடன் அவர்களுக்கான பயிற்சி நெறிகள்,

கருத்தரங்குகளை நடாத்தல், அஹதியா பாடசாலைகளுக்கு பாடத்திட்டம் ஒன்றை அறிமுகம் செய்தல் மற்றும் அஹதிய்யாப் பரீட்சை நடாத்துதல்.

08. முஸ்லிம் நலன்புரி சங்கங்களை பதிவு செய்தலுடன் அவற்றை பரிபாலித்தல்.

09. இஸ்லாமிய பாலர் பாடசாலை ஆசிரியர்களை பயிற்றுவித்தலும், தேவையான வழிகாட்டல்களை வழங்கலும்.

10. முஸ்லிம் கலை, இலக்கிய வாதிகளை கௌரவிக்கும் முகமாக ஆண்டுதோறும் விருது வழங்கும் வைபவம் ஒன்றை ஏற்பாடு செய்து கலாபூஷண விருது வழங்கல். (இவ்விருது கலாசார திணைக்களத்துடன் இணைந்து வழங்கப்படுகின்றது.)

11. முஸ்லிம் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்தும் முகமாக அவர்களது படைப்புக்களான புத்தகங்களை கொள்வனவு செய்து முஸ்லிம் பாடசாலைகளில் உள்ள நூலகங்களுக்கு விநியோகித்தல்.

12. பள்ளிவாசல்களின் நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்களுக்கும், இஸ்லாமிய மத ஸ்தாபனங்களின் பரிபாலன சபை உறுப்பினர்களுக்கும் கருத்தரங்குகள் பயிற்சிகள் நடாத்தல்.

13. சர்வதேச ரீதியாக நடாத்தப்படுகின்ற கிராஅத் மற்றும் மனனப் போட்டிகளுக்கான போட்டியாளர்களை தெரிவு செய்தல், இப்போட்டிகளில் வெற்றிபெற்றவர்களை வருடாந்தம் எகிப்து, ஈரான், ஐக்கிய அரபு இராச்சியம், மலேசியா, சவூதி அரேபியா ஆகிய நாடுகளுக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுத்தல்.

14. இஸ்லாமிய உயர் கல்விக்காக மாணவர்களை தெரிவு செய்தல்.

15. மௌலவிமார்களுக்கான விசேட அடையாள அட்டை வழங்குதல்.


16. வெளிநாட்டு வேலை வாய்ப்புக்காக சவூதி அரேபிய நாட்டிற்கு செல்லும் இஸ்லாமியர்களை முஸ்லிம் என உறுதி செய்து மதச் சான்றிதழ் வழங்குதல்.

## 3. ஒழுங்கமைப்பு வடிவம்

மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளை செயற்படுத்துவது தொடர்பாக முக்கிய 5 பிரிவுகளை உள்ளடக்கியதாக இத்திணைக்களம் ஒழுங்கமைப்பின் கட்டமைப்பு தயாரிக்கப்பட்டுள்ளதுடன், குறிப்பிட்ட பிரிவுகள் கீழ்வருமாறு.

1. நிருவாக மற்றும் அபிவிருத்திப் பிரிவு
2. நிதிப்பிரிவு
3. மத, மற்றும் கலாசாரப் பிரிவு
4. வக்ப் பிரிவு
5. உள்ளகக்கணக்காய்வுப் பிரிவு

# Organization Structure
## Department of Muslim Religious and Cultural Affairs



**4. திணைக்கள உத்தியோகத்தர்கள்.**

**4.1. அனுமதிக்கப்பட்ட அலுவலக குழாம்**

திணைக்களத்தின் ஒழுங்கமைப்பின் கட்டமைப்பின் கீழ் அனுமதிக்கப்பட்ட 123 அலுவலர்களைக் கொண்ட 2017.12.31 ஆம் திகதிக்குரிய அலுவலர்களின் விபரம் கீழ்வருமாறு

| இல. | பதவி | அனுமதிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கை | சேவையில் உள்ளவர்களின் எண்ணிக்கை | | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | | நிரந்தர | தற்காலிக | |
| 01 | பணிப்பாளர் | 01 | 01 | - | 0 |
| 02 | கணக்காளர் | 01 | 01 | - | 0 |
| 03 | உள்ளக கணக்காய்வாளர் (இ.க. சேவை) | 01 | - | - | 01 |
| 04 | பிரதி/உதவிப்பணிப்பாளர் (இ.நி.சேவை) | 04 | 01 | - | 03 |
| 05 | பிரதி/உதவிப்பணிப்பாளர் (இ.நி.சேவை அல்லாத) | 02 | 0 | - | 02 |
| 06 | நிருவாக உத்தியோகத்தர் | 01 | 0 | - | 01 |
| 07 | மொழி பெயர்ப்பாளர் (சிங்களம் /தமிழ்) | 01 | 0 | - | 01 |
| 08 | வக்ப் சபை செயலாளர் | 01 | 0 | - | 01 |
| 09 | வக்ப் நியாய சபை செயலாளர் | 01 | 0 | - | 01 |
| 10 | புலனாய்வு உத்தியோகத்தர் | 02 | 0 | - | 02 |
| 11 | கலாச்சார உத்தியோகத்தர் | 03 | 03 | - | 0 |
| 12 | கலாசார உதவியாளர் | 15 | 09 | - | 06 |
| 13 | தர்மநிதி உதவியாளர் | 01 | 01 | - | 0 |
| 14 | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 50 | 40 | - | 10 |
| 15 | முகாமைத்துவ உதவியாளர் | 22 | 19 | - | 03 |
| 16 | சாரதி | 04 | 04 | - | 0 |
| 17 | அலுவலக உத்தியோகத்தர் சேவை | 13 | 10 | - | 03 |
| | **முழு மொத்தம்** | **123** | **89** | | **34** |

### 4.2. உத்தியோகத்தர்கள் மாற்றங்கள்

**2017 வருடத்தில் உத்தியோகத்தர் மாற்றங்கள்**

| | | |
|---|---|---|
| இடமாற்றங்கள் | வருகை | 03 |
| | வெளியேறல் | 09 |
| நியமனங்கள் | நிரந்தர | 27 |
| | தற்காலிக | - |
| பதவி உயர்வு | - | |
| சேவையை குறைத்தல் | - | |
| சேவை விட்டுவிடல் | 02 | |
| இராஜினாமா | 02 | |
| ஓய்வு பெறல் | 01 | |
| இறத்தல் | - | |
| வேறு (அரச சேவையில் வேறு பதவிகளுக்காக விடுவித்தல்) | 04 | |

## 05. நிருவாக மற்றும் அபிவிருத்திப் பிரிவால் ஆற்றப்பட்ட கடமைகள்

### 5.1 நிருவாகப் பிரிவால் ஆற்றப்பட்ட கடமைகள்

திணைக்களத்தின் அனைத்து பதவிகள் மற்றும் சேவைகள் அதாவது நியமனம் தொடக்கம் ஓய்வு பெறல வரையான, இடமாற்றங்கள், பதவி உயர்வுகள், ஒழுக்காற்று நடவடிக்கைகள் மற்றும் சேவை நீடிப்பு போன்ற நிர்வாக செயற்பாடுகள் தபால்" தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சுடனும் அரசாங்க நிருவாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழு ஆகியவற்றுடனும் இணைந்து நடைமுறைப்படுத்தல்.

- திணைக்களத்துடன் தொடர்புடைய ஆட்சேர்ப்புத்திட்டங்களைத் தயாரித்து அவற்றை சிபாரிசு மற்றும் அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தல்.
- பிரத்தியேகக் கோவைகளைப் பேணுதல்
- தபால்
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விடுமுறை தொடர்பான விடயங்கள்
- புகையிரத ஆணைச்சீட்டுகள் மற்றும் புகையிரத பருவகாலச்சீட்டுகள் தொடர்பிலான கடமைகள்
- வாகனங்களை பேணுதல், போக்குவரத்து வசதிகளை செய்து கொடுத்தல்" ஆலோசனை மன்றத்திற்கு பதில் வழங்கள்.
- தேர்தல் கடமைகள்
- பயிற்சிக்கான நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைத்தலும் அந்நிகழ்ச்சித்திட்டங்களுக்கு பயிலுநர்களை அனுப்பி வைத்தல்
- பாராளுமன்ற வினாக்களுக்கு விடைகளை சமர்ப்பித்தல்
- அலுவலக சாதனங்களை பராமரித்தல்
- அலுவலக கட்டடத்தைப் பராமரித்தல்
- ‘‘அக்ரஹார’’ காப்புறுதி சார்ந்த வேலை
- கடன் முற்பணங்களை அங்கீகரித்தல்

#### 5.1.1. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

2017 ஆம் ஆண்டில் மு.ச.ப.அ. திணைக்கள உத்தியோகத்தர்கள் பங்குபற்றிய உள்ளூர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

2017 ஆம் ஆண்டின் பயிற்சிக் கருத்தரங்குகளுக்கான நிதி ஒதுக்கீடு - ரூ.200,000.00
2017 ஆம் ஆண்டின் பயிற்சிக் கருத்தரங்குகளுக்கான செலவு - ரூ.199,904.00

| தொ. இல | பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர் | நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்திய நிறுவனம் | பங்கு கொண்ட உத்தியோகத் தர்களின் எண்ணிக்கை | காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|
| 1 | CIGAS | Academy of Financial Studies | 01 | 02 |
| 2 | Productivity Awareness Programme | Dept. of MRCA | 35 | 01 |
| 3 | குறிப்பு எழுதுதல் மற்றும் கோவைப்படுத்தல் | Dept. of MRCA | 37 | 01 |
| 4 | முஸ்லிம் பள்ளிவாசல் பரிபாலனம் மற்றும் அரச நிதி சம்பந்தமாக கள உத்தியோகத்தர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு | Dept. of MRCA | 52 | 01 |
| 5 | Workshop to Collect end user information | Academy of Financial Studies | 03 | 01 |
| 6 | English for office Managment | National Institute of Labor Studies | 01 | 7 Week |
| 7 | வகுப் சபை Board Paper தயாரித்தல் சம்பந்தமான பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | Dept. of MRCA | 34 | 02 |
| 8 | Stregic Planing | Dept. of MRCA | 36 | 01 |
| 9 | Stregic Planing | Dept. of MRCA | 26 | 01 |
| 10 | MS Access Com. Training | S.L. Institute of printing | 10 | 03 |
| 11 | Attitude Development and Helthy Mind | Dept. of MRCA | 35 | 01 |
| 12 | Green Productivity | Dept. of MRCA | 32 | 01 |
| 13 | Dip. in Public Procurment & Contract Administration | Academy of Financial Studies | 01 | 01 year |

### 5.2 அபிவிருத்திப் பிரிவால் செய்யப்பட்ட நடவடிக்கைகள்


இதற்கமைவாக பிரதானமாக 02 நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- நாடு பூராகவும் மத ஸ்தாபனங்களை அபிவிருத்தி செய்தல்.
- தேசிய மீலாதுன் நபி அபிவிருத்தி வேலைத்திட்டம். (யாழ்பாணம்" கிளிநொச்சி மற்றும் முல்லைதீவு மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டது)

இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நாடளாவிய ரீதியில் உள்ள முஸ்லிம் பள்ளிவாசல், அரபுக் கல்லூரிகள், குர்ஆன் மத்ரஸாக்கள், அஹதிய்யா (தஹம்) பாடசாலைகள் உட்பட மத ஸ்தாபனங்களின் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டன. மூலதனச் செலவின் கீழ் இத்திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகளின் அடிப்படையில் இவ்வபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கு கீழ்வருமாறு நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்டன.

| **அபிவிருத்தி வேலைத்திட்டம்** | **2017 வருடத்திற்கான ஒதுக்கீடு (ரூ.மில்லியன்)** |
|---|---|
| மதஸ்தாபனங்கள் அபிவிருத்தி செய்தல். (நாடளாவிய ரீதியில்) | 20 |
| தேசிய மீலாதுன் நபி அபிவிருத்தி வேலைத்திட்டம். | 14 |


**2017 அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு ஒதுக்கப்பட்ட விதம்**




**நாடளாவிய ரீதியில் உள்ள வணக்கஸ்தலங்களுக்கான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**


| **மத நிறுவனம்** | **2017 ஆம் ஆண்டுக்காக மூலதனச் செலவினம் (ரூ.மில்லியன்)** | **இலக்குக்கு உட்பட்ட மதஸ்தலங்களின் எண்ணிக்கை** | **2017.12.31 வரைக்குமான முன்னேற்றம்** | |
|---|---|---|---|---|
| | | | **பௌதீக** | **நிதிசார் (ரூ.மில்லியன்)** |
| முஸ்லிம் பள்ளிவாசல் | 17.175 | 99 | 99 | 14.1397 |
| அரபுப் கல்லூரிகள் | 1.175 | 08 | 08 | 1.137 |
| அஹதியாப் பாடசாலை, ஹிப்ளுல் குர்ஆன் மத்ரஸா | 1.5 | 08 | 08 | 1.456 |
| வேறு மத நிறுவனம் | 0.15 | 01 | 01 | 0.146 |

மாவட்ட மட்டத்தில் மத ஸ்தாபனங்களை அபிவிருத்தி செய்தமுறை கீழ்வருமாறு




| | Ampara | Anuradapura | Batticalo | Matale | Trincomalee | Kurunegala | Puttlam | Gampaha | Colombo | Polonnaruwa | Galle | Ratnapura | Kegalle | Hambantota | Kandy | Nuwara Eliya | Matara |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Allocation Rs. '000 | 350 | 300 | 700 | 750 | 900 | 2100 | 1725 | 550 | 1700 | 500 | 700 | 300 | 1825 | 200 | 6275 | 500 | 625 |
| No of Mosques | 2 | 3 | 3 | 5 | 7 | 13 | 13 | 3 | 13 | 2 | 5 | 1 | 12 | 1 | 28 | 2 | 3 |

❖ வருடாந்தம் மீலாத் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை ஒழுங்கு செய்வதும் அதனை செயன்முறைப்படுத்துவதும் - 2017 ஆம் ஆண்டு காலத்தின் போது இந்நிகழ்ச்சித்திட்டத்துக்கென யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி" முல்லைதீவு மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு, செயன்முறைப்படுத்தப்பட்டதுடன் பின்வரும் விதத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் நடாத்தப்பட்டன. இதற்காக ரூபா' மில்லியன் 14 ஒதுக்கப்பட்டதுடன் கீழ்வருமாறு அபிவிருத்தி செய்யப்பட்டுத.




| | Jaffna | Chawakachchery | Pedurukuduwa | Welani | Naynatheewu | Karchchi | Punakary | Mullaitheewu | Ottusudan |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Allocation. '000 | 6300 | 1000 | 200 | 1000 | 500 | 950 | 1050 | 2700 | 300 |
| No of Mosques | 16 | 2 | 1 | 1 | 1 | 5 | 2 | 5 | 1 |

இவ் அபிவிருத்தித் திட்டத்திற்கு பிரதேச செயலகத்தினூடாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

❖ **உத்தேச முஸ்லிம் கலாச்சாராத் தொகுதியின் நிர்மாணப்பணி**



முஸ்லிம் கலாசார கட்டிடத் தொகுதியின் நிர்மாணப்பணி முடிவடைந்த நிலையில் வெளிப்படும் காட்சி

இல.180, டீ.பீ. ஜாயா மாவத்தை, கொழும்பு 10 இல் 2006.11.09 ம் திகதி கட்டிட நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டு இன்றுவரை உத்தேச முஸ்லிம் கலாச்சாரத் தொகுதியின் நிர்மானப்பணிகளுக்கு மதிப்பிடப்பட்ட செலவினம் ரூ.596 மில்லியனாகும். இத்தொகுதிக்கான நிர்மாணப்பணி மத்திய இயந்திரவியல் கட்டுவேலை பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 09 மாடிகளைக் கொண்ட இக்கட்டிடம் முஸ்லிம் சமய கலாச்சார அலுவல்கள் திணைக்கள அலுவலகம், இலங்கை வக்பு சபை அலுவலகம், வக்பு நியாய சபை, சகல வசதிகளும் கொண்ட கேட்போர் கூடம், நூலகம், தங்குமிட அறைகள் மற்றும் வாகனத்தரிப்பிடம் என்பவற்றை கொண்டதாக நிர்மாணிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இத்தொகுதிக்கான நிர்மாணப்பணிகள் 03 கட்டங்களாக செயற்படுத்தப்பட்டது. இக்கட்டடம் முதலாவது கட்டமாக நிலத்தூண்கள் கட்டுதல் இரண்டாவது கட்டமாக கொங்ரீட் கட்டமைப்பு என்பன ஏலவே பூர்த்தியாக்கப்பட்டுள்ளன. அதே வேளை மூன்றாம் கட்டமான கட்டடத்தின் செப்பனிடும் பணி வேலைகள் 2014 ஆம் 2015ம் ஆண்டுக்காண மூலதனம் ஒதுக்கப்படாமையால் நிறுத்தப்பட்டது. 2016ஆம் ஆண்டிற்கு ரூபா மில்லியன் 295.5 வும் 2017 ஆம் ஆண்டிற்கு ரூபா 43 மில்லியன் நிதி ஒதுக்கீடு அமைச்சின் நிகழ்ச்சித்திட்டத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய 4 மாடிகளுக்கான வேலைகள் பூரணப்படுத்துவதற்கு முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளதுடன் 2017.12.31ம் திகதி வரை அவ்வேலைகள் இடம் பெற்றுள்ளது. நிர்மானப்பணிக்கு 2017 ஆம் வருடத்தில் ரூபா மில்லியன 31.54 கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது.

❖ உரிய நேரத்திற்கு அமைச்சிற்கு அபிவிருத்தி வேலைத்திட்டம் தொடர்பிலான முன்னேற்ற அறிக்கைகளை சமர்ப்பித்தல்

## 6. நிதிப்பிரிவால் செய்யப்படும் கடமைகளும் அறிக்கைகளும்

### 6.1 நிதிப்பிரிவால் செய்யப்படும் கடமைகள்

❖ ஆண்டு மதிப்பீடுகளை தயாரித்தல்
❖ ஆண்டு ஒதுக்கீட்டு கணக்குகளை சீராக்கல்
❖ களஞ்சிய முகாமைத்துவம்

- அரசாங்க உத்தியோகத்தர் முற்பணங்கள், பீ கணக்கு நடவடிக்கைகள்
- உறுதிச்சீட்டுகளுக்கான பணம் வழங்கல்
- சம்பளங்கள் படிகள் வழங்குவதும் கணக்குகளை பேணுதல்
- நிதி ஏடுகள், பேரேடுகள், பதிவேடுகள் என்பவற்றை பேணுதல்
- காசோலைகள் வழங்குதல்
- மாதாந்த கணக்குகளின் பொழிப்புகளைத்தயாரித்தல்
- திறைசேரி, கணக்காய்வாளர், குறித்த அமைச்சு ஆகியவர்களுக்கு கணக்குகளின் பொழிப்புகளைச் சமர்ப்பித்தல்.

**6.2 நிதி அறிக்கைகள்**

**6.2.1. மீண்டுவரும் செலவினம் (பக்கம் - 15 )**

**6.2.2. மூலதனச் செலவினம் (பக்கம் - 16 )**

**6.2.3. முற்பணக் கணக்குகள் (பக்கம் - 17 )**

**மூலதனச் செலவினத்தின் மொத்த தேறிய ஏற்பாடுகளுக்கும் உண்மைச செலவுகளுக்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை விளக்குதல் 2017**

திணைக்களத்தின் பெயர் : முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

செலவினத் தலைப்பு : 202

| நிகழ்ச்சித் திட்டத்தின் இலக்கம் | கருத்திட்டத்தின் இலக்கம் | உப கருத்திட்டத்தின் இலக்கம் | செலவுவிடய இலக்கம் | நிதியிடல் (குறியீட்டு இலக்கம்) | மீண்டுவரும் செலவினங்களின் விபரம் ரூபா | மொத்த ஒதுக்கீடு ரூபா | உண்மைச் செலவினம் ரூபா | சேமிப்பு ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | **ஒப்பந்த சேவைகள்** | | | |
| 2 | 1 | 0 | 1401 | 11 | போக்குவரத்து | 90,000 | 89,683 | **317** |
| 2 | 1 | 0 | 1402 | 11 | தபால் மற்றும் தொலைத் தொடர்புகள் | 1,000,000 | 991,854 | **8,146** |
| 2 | 1 | 0 | 1403 | 11 | மின்சாரமும் நீரும் | 1,233,000 | 1,233,000 | **0** |
| 2 | 1 | 0 | 1404 | 11 | வாடகைகளும் உள்ளூர் வரிகளும் | 155,000 | 154,000 | **1,000** |
| | | | | | **சேவைகள்** | | | |
| 2 | 1 | 0 | 1409 | 11 | ஏனையவை | 34,500,000 | 20,603,020 | 13,896,980 |
| 2 | 1 | 1 | 1501 | 11 | அஹதியா பாடசாலை ஆசிரியர்களுக்கான சீருடைக் கொடுப்பனவு | 7,000,000 | 6,648,053 | 351,947 |
| 2 | 1 | 2 | 1501 | 11 | நூலக புத்தகக் கொடுப்பனவு | 9,000,000 | 8,480,000 | 520,000 |
| 2 | 1 | 3 | 1501 | 11 | அஹதியா பாடப் புத்தகங்கள் தயாரித்தல் மற்றும் அச்சிடல் | 4,000,000 | 3,999,594 | 406 |
| | | | | | **மாற்றல்கள்** | | | |
| 2 | 1 | 0 | 1506 | 11 | ஆதனக்கடன் வட்டி | 35,000 | 34,223 | 777 |
| 2 | 1 | 0 | 1508 | 11 | பொது நிலையங்கள் | 800,000 | 798,000 | 2,000 |
| 2 | 1 | 0 | 1701 | 11 | நஷ்டங்களும் அறவீடுகளும் | 100,000 | 98,017 | 1,983 |
| | | | | | **ஆளுக்குரிய வேதனாதிகள்** | | | |
| 2 | 1 | 0 | 1001 | 11 | சம்பளங்களும் கூலிகளும் | 25,930,000 | 25,865,894 | **64,106** |
| 2 | 1 | 0 | 1002 | 11 | மேலதிக நேர சம்பளமும் பிறபடிகளும் | 1,000,000 | 999,010 | **990** |
| 2 | 1 | 0 | 1003 | 11 | ஏனைய கொடுப்பனவுகள் | 17,900,000 | 17,719,615 | **180,385** |
| | | | | | **பியாணச் செலவுகள்** | | | |
| 2 | 1 | 0 | 1101 | 11 | உள்ளூர் | 580,000 | 566,705 | **13,295** |
| 2 | 1 | 0 | 1102 | 11 | வெளியூர் | 1,265,000 | 1,259,191 | **5,809** |
| | | | | | **வழங்கல்கள்** | | | |
| 2 | 1 | 0 | 1201 | 11 | காகிதாதிகள் | 1,200,000 | 1,198,938 | **1,062** |
| 2 | 1 | 0 | 1202 | 11 | எரிபொருள் | 750,000 | 720,283 | **29,717** |
| 2 | 1 | 0 | 1203 | 11 | உணவும் சீருடைகளும் | 87,000 | 86,870 | **130** |
| | | | | | **பராமரிப்பு செலவினம** | | | |
| 2 | 1 | 0 | 1301 | 11 | வாகனங்கள் | 1,000,000 | 996,585 | **3,415** |
| 2 | 1 | 0 | 1302 | 11 | பொறித்தொகுதி, இயந்திரஉபகரணங்கள் | 460,000 | 420,799 | **39,201** |
| 2 | 1 | 0 | 1303 | 11 | கட்டிடங்களும் கட்டமைப்புகளும் | 1,000,000 | 955,680 | **44,320** |

**மூலதனச் செலவினத்தின் மொத்தத் தேறிய ஏற்பாடுகளுக்கும் உண்மைச் செலவுகளுக்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை விளக்குதல் - 2017**

திணைக்களத்தின் பெயர் : முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

செலவினத் தலைப்பு : 202

| நிகழ்ச்சித்திட்டத்தின் இலக்கம் | கருத்திட்டத்தின் இலக்கம் | உப கருத்திட்டத்தின் இலக்கம் | செலவுவிடய இலக்கம் | நிதியிடல் (குறியீட்டு இலக்கம்) | மூலதனச் செலவினங்களின் விபரம் | மொத்த ஒதுக்கீடு ரூபா | உண்மைச் செலவினம் ரூபா | சேமிப்பு ரூபா |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | **மூலதனச் செலவினங்களின் விபரம்** | | | |
| 2 | 2 | 0 | 2001 | 11 | கட்டடங்களும் கட்டமைப்புக்களும் | 250,000 | 249,239 | 762 |
| 2 | 2 | 0 | 2002 | 11 | பொறித்தொகுதி, இயந்திரம், உபகரணங்கள் | 200,000 | 10,280 | 189,720 |
| 2 | 2 | 0 | 2003 | 11 | வாகனங்கள் | 400,000 | 386,193 | 13,807 |
| | | | | | **மூலதனச் சொத்துக்கள் கொள்வனவு** | | | |
| 2 | 2 | 0 | 2102 | 11 | தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் | 1,000,000 | 987,395 | 12,605 |
| 2 | 2 | 0 | 2103 | 11 | பொறித்தொகுதி, இயந்திரம், உபகரணங்கள் | 1,000,000 | 998,896 | 1,105 |
| 2 | 1 | 1 | 2106 | 11 | மென்பொருள் அபிவிருத்தி | 150,000 | 0 | 150,000 |
| | | | | | **கொள்திறன் கட்டுமானம** | | | |
| 2 | 2 | 0 | 2401 | 11 | ஊழியர் பயிற்சி | 200,000 | 199,904 | 96 |
| | | | | | **வேறு மூலதனச் செலவினம் மற்றும் வேறு முதலீடு** | | | |
| 2 | 1 | 6 | 2104 | 11 | தேசிய மீலாத் அபிவிருத்தி வேலைத்திட்டம் - அஹதியா பாடசாலைகளுக்கு வசதிகளை பெற்றுக்கொடுத்தல் | 14,000,000 | 13,437,845 | 562,155 |
| | | | | | முஸ்லிம் கலாசார நிலையத்தை கட்டுதல் மற்றும் பள்ளிவாசல் அபிவிருத்தியும் | 20,000,000 | 17,347,789 | 2,652,211 |

# முற்பணக் கணக்கு மற்றும் வைப்புக் கணக்குகளுக்கான கட்டப்பாட்டுக் கணக்குகளின் சுருக்கம் - 2017

திணைக்களத்தின் பெயர் : முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்

செலவினத் தலைப்பு : 202

| முற்பண/ வைப்புக் கணக்குகளின் பெயர் | கணக்கு இலக்கம்* | திணைக்களப் புத்தகங்களின் பிரகாரம் | | | | திறைசேரிப் புத்தகங்களின் பிரகாரம் 2017/12/31 திகதியன்று மீதி ரூ' |
|---|---|---|---|---|---|---|
| | | 2017/01/01 திகதியன்று ஆரம்ப மீதி ரூ' | வருடத்தினுள் பற்று வைத்தல் ரூ' | வருடத்தினுள் வரவு வைத்தல் ரூ' | 2017/12/31 திகதியன்று இறுதி மீதி ரூ' | |
| I. அரசாங்க அலுவலர்களின் முற்பணம் | 202011 | 6,470,089.00 | 3,656,074.00 | 1,893,228.68 | 8,232,934.32 | 8,232,934.32 |
| | 202012 | | 550,870.00 | 766,377.00 | -215,507.00 | -215,507.00 |
| | | **6,470,089.00** | **4,206,944.00** | **2,659,605.68** | **8,017,427.32** | **8,017,427.32** |
| II. ஏனைய முற்பணங்கள் | | | | | | |
| III. நானாவித முற்பணங்கள் | | | | | | |
| IV வைப்புக்கள் | | | | | | |
| (i) பொது வைப்புக்கள் | **6000/0016/0094** | 17,415,648.00 | | | 17,415,648.00 | 17,415,648.00 |
| | **6000/0002/0148** | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 |
| | **6000/0018/0097** | 0.00 | 802,541.57 | 1,424,743.00 | 622,202.00 | 622,202.00 |
| (ii) ஏனைய வைப்புக்கள் | | | | | | |

## 7. சமய மற்றும் கலாசார பிரிவினால் நிறைவேற்றப்பட்ட பணிகளாவன

- ❖ அரபுப் பாடசாலைகளைப் பதிவு செய்தல், பாடவிதானங்களை தயாரித்துலும் அதன் நிரவாகம் தொடர்பிலான வேலையும்.
- ❖ ஹிப்ளுல் குர்ஆன் மத்ரஸாவைப் பதிவு செய்தலும், அதன் பாடவிதானத்தை தயாரித்தலும் அதன் நிர்வாகப் பணிகளைக் கவனித்தலும்.
- ❖ குர்ஆன் மத்ரஸாவைப் பதிவு செய்தலும், பாடவிதானத்தை தயார் செய்தலும் அதன் நிர்வாகப் பணியை கவனித்தலும்.
- ❖ அஹதியா (தகம்) பாடசாலைகளைப் பதிவு செய்தலும், பாடவிதானத்தை தயாரித்தலும்.
- ❖ அஹதியா (தகம்) பாடசாலைகளுக்கான சீருடைகளை விநினியோகித்தல்.
- ❖ அஹதியா தம்மப் பாடசாலை ஆசிரியர்களுக்கு நூல்களுக்கான படி வழங்குதல்.
- ❖ ஹஜ் யாத்திரைகளுக்கான நடவடிக்கைகளை ஒழுங்கமைத்தல்.
- ❖ வதிவிட விசாக்களுக்கு சிபாரிசு செய்தல்.
- ❖ சமய மற்றும் சமய நிறுவனங்களுக்கான நூல்கள் மற்றும் பண்டங்கள் தொடர்பில் சுங்கத்தீர்வை நிவாரணங்களைச் சிபாரிசு செய்தல்.
- ❖ அரபுப் பாடசாலையிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களை எகிப்திலுள்ள அல் – அஸ்ஹர் பல்கலைக்கழகப் புலமைப்பரிசில் திட்டத்திற்கு உட்படுத்தல்.
- ❖ புனித ரமழான் காலத்தில் நோன்பாளிகளுக்காக பேரீத்தம் பழங்களை விநியோகிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- ❖ புனித ரமழான் காலத்தில் நோன்பாளிகளுக்காக சவூதி அரேபியா, ஐக்கிய அரபு இராஜ்ஜியம் மற்றும் ஈரான் போன்ற நாடுகளில் இருந்து எமது நாட்டுக்கு 300 மெற்றிக் தொன் பேரீத்தம் பழம் அன்பளிப்பாக வழங்கப்பட்டு அதனை மாவட்ட மட்டத்தில் விநியோகிக்கப்பட்டது. இதற்காக திணைக்களத்தின் மீண்டுவரும் செலவின் கீழ் 20 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

### ❖ தேசிய மீலாதுன்நபி விழா கொண்டாட்டம்





தேசிய மீலாதுன் நபி அங்குரார்ப்பண வைபவம் உலக வாழ் முஸ்லிம்கள் மிகவும் பக்தியோடு கொண்டாடும் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் பிறந்த தினமான 2017.12.01ம் திகதியாகும். குறிப்பிட்ட வைபவம் யாழ்ப்பாணம் மாவட்டத்தை முற்படுத்தி கொண்டாடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. தேசிய மீலாதுன்நபி கொண்டாட்டம் தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகார கௌரவ அமைச்சர் எம்.எச்.ஏ. ஹலீம் அவர்களின் அழைப்பின்பேரில் இலங்கை ஜனநாயக, சோசலிச குடியரசு ஸபாநாயகர் கௌரவ கரு ஜயஸுரிய அவர்களின் தலைமையில் 2017.12.23 ஆம் திகதி யாழ்ப்பாணம் ஓஸ்மானியா கல்லூரியில் இடம்பெற்றது.

- **தேசிய மீலாத் தினத்தை முன்னிட்டு மாகாண மட்டம்" தேசிய மட்டத்தில் போட்டிகளை நடாத்துதல்**

நாடலாவிய ரீதியில் வருடாந்தம் பாடசாலை மாணவ, மாணவியர்களுக்கிடையில் பேச்சு சிறுகதை, கட்டுரை, கிராஅத், அரபு எழுத்தணி மற்றும் குர்ஆன் மனனம், fpuhmj; Mfpa போட்டிகள் நடாத்தப்படுகின்றன. மாகாண கல்வித் திணைக்களத்தின் மேற்பார்வையில் மாகாண மட்டத்தில் போட்டிகள் நடாத்தப்பட்டு முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு தேசிய மட்டத்தில் நடாத்தும் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு தெரிவு செய்யப்படுவர். தேசிய மீலாத் இறுதிப்போட்டியில் முதலிடம் பெற்ற 75 பேருக்கு சான்றிதழ்களும் பணப்பரிசில்களும் வழங்கப்பட்டன. இவ்வைபவம் 2017.12.23 ஆம் திகதி யாழ்ப்பாணம் ஒஸ்மானியா கல்லூரியில் இடம்பெற்றது. இவ்வைபவத்தில் ஜனநாயக, சோசலிச குடியரசு ஸபாநாயகர் அவர்கள் சான்றிதழ்களை வழங்கிவைத்தார்.

| 2017 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு (ரூ.மி) | 2017/12/31 திகதிக்கு நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி) | 2017/12/31 பௌதீக முன்னேற்றம் |
|---|---|---|
| 5.947 | 5.386 | தேசிய மட்ட இறுதிப் போட்டிகள் 2017 நவம்பர் 05, 06ம் திகதிகளில் கொழும்பு-12 பாத்திமா மகளிர் கல்லூரியில் நடைபெற்றன. வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்கள் 2017.12.23 ம் திகதி தேசிய மீலாத் அங்குரார்பன வைபவத்தில் ஜனநாயக, சோசலிச குடியரசு ஸபாநாயகர் கௌரவ கரு ஜயஸுரிய அவர்களால் வழங்கப்பட்டன. |

- **வருடாந்த கலாபூசண விருதுக்கான கலைஞர்களைத் தெரிவு செய்தல்.**

முஸ்லிம் கலைஞர்களை கௌரவிப்பதற்காகவும் மற்றும் அவர்களை ஊக்குவிப்பதன் பொருட்டும் வருடாந்தம் கலாச்சாரத் திணைக்களத்தின் மூலம் கலைஞர்கள் தெரிவு செய்யப்பட்டு கலாபூசண விருது வழங்கப்படுகின்றது. இம்முறை 55 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதையடுத்து அதில் 10 பேர்கள் தெரிவுசெய்யப்பட்டு இவர்களுக்கான விருது வழங்கும் வைபவம் கொழும்பு-07, நெலும்பொகுன மண்டபத்தில் 2017.12.15 ஆம் திகதி நடைபெற்றது.

- **முஹர்ரம் தினம்**

இஸ்லாமிய நாட்காட்டியின்படி முஸ்லிம்களின் புது வருடம் முஹர்ரம் மாதம் ஆரம்பிக்கப்படுகின்றது. இவ்வருடம் முஹர்ரம் மாதம் செப்டெம்பர் 25 ஆம் திகதி ஆரம்பமாகியது. முஹர்ரம் தினத்தை வரவேற்கும் வைபவம் தபால" தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய கலாசார அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இதில் அஹதிய்யாப் பாடசாலை மாணவர்களின் சமய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

## ❖ ஹஜ் வேலைத்திட்டம் :

2017 புனித ஹஜ் கடமைக்காக புனித மக்கா நகருக்கு இலங்கையில் இருந்து 3400 பேருக்கு இக்கடமையை நிறைவேற்றுவதற்கு யாத்திரிகர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதற்கு திணைக்களத்தினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதற்கென எமது திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட 97 ஹஜ் முகவர்களும், ஹஜ் யாத்திரிகர்களுக்கான வசதிகளை மேற்கொள்வதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.



## ❖ முஸ்லிம் எழுத்தாளர்களை ஊக்குவித்தல்

முஸ்லிம் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்கில் அவர்களின் வெளியீடுகளைக் கொள்முதல் செய்து அவற்றை முஸ்லிம் பாடசாலைகளிலுள்ள நூலகங்களுக்கு விநியோகித்தல். இதற்காக நடைமுறைச்செலவின்கீழ் ரூபா 0.237 மில்லியன் ஒதுக்கப்பட்டு, 48 எழுத்தாளர்களிடமிருந்து நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

## ❖ மௌலவிமார்களுக்கு அடையாள அட்டை வழங்குதல்

2017 ஆண்டு நாடு முழுவதிலிமிருந்து விண்ணப்பித்த 415 மௌலவிமார்களுக்கான அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன.

## ❖ தேசிய அல்குர்ஆன் போட்டிகள் நடாத்தலும் சர்வதேச போட்டிகளுக்கு தகுதியானவர்களை தெரிவு செய்தலும்.




தேசிய அல்குர்ஆன் கிராஅத் மனனப் போட்டிக்கான தெரிவுப் போட்டிகள், கொழும்பு 12, அல் ஹிக்மா கல்லூரியில் 2017 மார்ச் மாதம் 27ம், 28ம் திகதிகளில் நடைபெற்றதுடன் 7 பகுதிகளாக இடம் பெற்ற இப்போட்டிகளில் முதலிடங்களை பெற்ற மாணவ மாணவிகளுக்கு கௌரவ அஞ்சல், அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகாரங்கள் அமைச்சர் எம்.

எச். ஏ. ஹலீம் அவர்களின் தலைமையில் 2017.07.20ம் திகதி அஞ்சல், அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகாரங்கள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. அதில் முன்னிலை பெற்றவர்கள் ஐக்கிய அரபு இராஜ்ஜியத்திற்கு ஒருவரும், மலேசியாவிற்கு இருவரும், துருக்கி நாட்டிற்கு இருவருமாக சர்வதேச குர்ஆன் மனனப் போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டு அனுப்பப்பட்டனர்.

❖ அரசாங்கக் கொண்டாட்டங்களில் இஸ்லாம் மத குருக்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்படும் விதத்தில் ஒருங்கிணைத்தலும், தேவையான பணியை நிறைவேற்றுதலும்.

❖ **வெளிநாட்டு உலமாக்களுக்கான வீசா பெற்றுக்கொள்வதற்கு சிபாரிசுக் கடிதம் விநியோகித்தல்.**

வெளிநாட்டிலிருந்து பள்ளிவாசல்களுக்கு வருகை தரும் மதகுருமார்களுக்கும், அரபுக் கலாசாலை, மத்ரசா போன்றவற்றிக்கு வருகை தரும் விரிவுரையாளர்களுக்கும் மாணவர்களுக்கும் வதிவிட விசாவினைப் பெற்றுக்கொள்வதற்கான சிபாரிசுக்கடிதம் வழங்குதல்.

❖ **குர்ஆன் மத்ரசாக்களுக்கான வேலைத்திட்டம்**

1675 குர்ஆன் மத்ரசாக்கள் இத்திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் இவ்வருடத்தில் மேலும் 12 குர்ஆன் மத்ரசாக்கள் பதிவு செய்யப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட 133 வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குர்ஆன் மத்ரசாக்களின் பரிபாலன செலவுகளுக்காக ரூபா 6000/= வீதம் வழங்கப்பட்டது.

| 2017 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு (ரூ.மி) | 2017/12/31 திகதிக்கு நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி) | 2017/12/31 பௌதீக முன்னேற்றம |
|---|---|---|
| 0.8 | 0.798 | 99.75% |

❖ **அஹதிய்யாப் பாடசாலை வேலைத்திட்டம்**

இத்திணைக்களத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட அஹதிய்யாப்பாடசாலை ஆசிரியர்களுக்கு வருடாந்தம் சீருடை மற்றும் புத்தகக் கொடுப்பனவு வழங்கப்படுகின்றன.

அஹதியாப்பாடசாலைகளுக்காக 6 ஆம் தரம் தொடக்கம் 9 ஆம் தரம் வரை விடயப்பரப்பிற்கு அமைவாக தமிழ் மொழி மூலம் தயாரிக்கப்பட்ட பாடப்புத்தகங்கள் 8 உம் சிங்கள மொழி மூலம் பாடப்புத்தகங்கள் 10 உம் ஆங்கில மொழி மூலத்தில் மொழிபெயர்க்கப்பட்ட 10 பாடப்புத்தகங்களும் மொத்தமாக 20 புத்தகங்கள் அச்சிடப்பட்டு வினியோகிக்கப்பட்டுள்ளன.

| விடயம் | 2017 ம் ஆண்டுக்கான ஒதுக்கீடு (ரூ.மி) | 2017.12.31ம் திகதியில் | |
|---|---|---|---|
| | | பௌதீக | நிதி |
| (i) சீருடை விநியோகம் | 7.0 | அஹதிய்யாப் பாடசாலை ஆசிரிய ஆசிரியைகள் 4445 பேர்க்கு சீருடைகள் வழங்கப்பட்டன. 94.97% | 6.648 |
| (ii) புத்தகக் கொடுப்பனவு | 9.0 | ஒரு ஆசிரியருக்கு ரூ. 2000 வீதம் 4238 ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டது. 94.22% | 8.48 |
| (iii) 09 அஹதிப்பாப் பாடப்புத்தகங்கள் அச்சிடல். | 4.0 | மொழிபெயர்க்கப்பட்ட 20 புத்தகங்கள் அச்சிடுவதற்கு அரசாங்க அச்சகத்திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது 99.92% | 3.997 |
| (iv) அஹதிய்யாப் பாடசாைல வினாத்தள்களை மதிப்பிடுவதற்கான நிதி ஏற்பாடு. | 0.4 | ஒக்டோபர் மாதம் பரீட்சை நடைபெற்றது. 97% | 0.388 |
| (v) அஹதியா பாடசாலை தேசிய பரீட்சை | 2.0 | பரீட்சை ஒக்தொம்பர் மாதம் பரீட்சை திணைக்களத்தின் மூலம் நடாத்தப்படும் | 2.0 |

❖ **அஹதிய்யாப் பாடசாலை மத நல்லிணக்க வேலைத்திட்டம்.**

புத்தசாசன அமைச்சின் ஆலோசனைக்கமைய பௌத்த, முஸ்லிம், கிறிஸ்தவ மற்றும் இந்து சமய திணைக்களங்கள் இணைந்து சகல மதங்களினதும் கலாச்சார விழுமியங்கள் சம்பந்தமான மாணவர்களது புரிந்துணர்வு, நல்லிணக்கம் என்பவற்றை மேன்படுத்தும் நோக்கமாகக் கொண்டு அஹதிய்யாப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆகியோரை ஒன்றிணைத்து வேலைத்திட்டமொன்று 2017 ஆகஸ்ட் மாதம் 05, 06, 07ம் திகதிகளில் குளியாப்பிட்டிய" தேசிய வாலிபர் பயிற்சி கூடத்தில் நடாத்தப்பட்டது. இவ்வேலைத்திட்டத்தில் திணைக்கள உத்தியோகத்தர்கள் 5 பேர், அஹதிய்யாப் பாடசாலை ஆசிரியர்கள் 10 பேர், மாணவர்கள் 40 பேர், அஹதிய்யா சம்மேளன உறுப்பினர் ஒருவர் மற்றும் சாரதி ஒருவரும் பங்குபற்றினார்கள்.

❖ **மிஃராஜ் தின நிகழ்வு**

முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லாஹ்தஆலாவை சந்திப்பதற்கு சென்ற இரவே மிஹ்ராஜ் இரவு என்று அழைக்கப்படுகின்றது. இச் சந்தர்ப்பத்திலேயே ஐங்காலத் தொழுகை பரிசாக வழங்கப்பட்டது. இச்சந்தர்ப்பத்தை நினைவு கூறுமுகமாகவே மிஃராஜ் இரவு கொண்டாடப்படுகின்றது. 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் 24ம் திகதி கௌரவ அஞ்சல், அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் விவகார அமைச்சர் எம்.எச்.ஏ ஹலீம் அவர்களின் தலைமையில் கொழும்பு - 10, மருதானை ஜும்மாப் பள்ளிவாசளில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

❖ **பயிற்சி நிகழ்ச்சிகளை செயற்படுத்தல்**

இஸ்லாமிய மதக் கல்வியை அபிவிருத்தி செய்யும் நோக்கில் யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களுக்கு கருத்தரங்கு ஒக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் நடைபெற்றது.

**8. வக்பு மற்றும் பள்ளி பரிபாலண பிரிவின் மூலம் செய்யப்பட்ட அலுவல்கள்.**

முஸ்லிம் பள்ளிவாசல்கள் மற்றும் தர்ம நம்பிக்கைப் பொறுப்புகள் அல்லது வக்புகள் சட்டத்தின் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்தல். அதன்பிரகாரம் பயிற்சி

- நாட்டின் சகல மாவட்டங்களிலுமுள்ள பள்ளிவாசல்களின் நிருவாகக் கடமைகளை நடாத்துதல்.
- பள்ளிவாசல்கை ளப் பதிவு செய்தல்.
- பள்ளிவாசல்களிலுள்ள நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்கு நியமனங்களை வழங்குதல்.
- ஒவ்வொரு வருடத்திற்குமான பள்ளிவாசல் கணக்கறிக்கைகளை பெறல். அக்கூற்றுகளைச் செவ்வைப்பார்த்தல். முஸ்லிம் தரும நிதி, நம்பிக்கைப் பொறுப்புகளுக்கான உதவுதொகைகளைப் பெற்றுக்கொள்வதும் அந்த நம்பிக்கைப் பொறுப்புகளைப் பேணுதலும்.
- முஸ்லிம் பள்ளிவாசல் பற்றியதான பிரச்சினைகள், நம்பிக்கையாளர் சபை மேன்முறையீடுகள், மனுக்களை ஒருங்கிணைத்தலும், தீர்க்க முடியாத பிரச்சினைகளை வக்பு சபைக்கு சமர்ப்பித்தலும்.

**<u>வக்பு சபை</u>**

2017ம் ஆண்டு 80 புதிய பள்ளிவாசல்கள் பதியப்பட்ட அதே வேளை, 120 பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. வக்பு சபையின் தீர்ப்புக்கு எதிராக வக்பு நியாய சபைக்கு முன்வைக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 14 ஆகும். தற்போது தீர்ப்பு வழங்கப்படாத வழக்குகள் 13 ஆகும்.

**<u>வக்பு நியாய சபை</u>**

வக்பு நியாய சபை நீதிச்சேவை ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்ட 03 அங்கத்தவர்களைக் கொண்டிருப்பதுடன் மாதாந்தம் இரண்டு கூட்டங்கள் நடாத்தப்படும். 2017 ஆம் ஆண்டின் போது பள்ளிவாசல்களால் சமர்ப்பிக்கப்பட்ட 14 வழக்குகள் நியாய சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், 12 வழக்குகள் விசாரிக்கப்பட்டுக்கொண்டிருப்பதுடன் இதற்கு மேலதிகமாக 2016 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட வழக்குகளில் 05 வழக்குகள் விசாரிக்கபட்டுவருகின்றதுடன் 07 வழக்குகளின் தொடர்பில் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளன.

## 09. நடைமுறைப்படுத்தப்பட்ட விசேட வேலைத்திட்டங்கள்.

❖ **தேசிய சுதந்திர தின வைபவம்**

தேசிய சுதந்திர தினத்தை முன்னிட்டு மத நிகழ்ச்சிகள் கொழும்பு பெரிய பள்ளிவாசலில் கௌரத தபால்" தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் மத விவகார அமைச்சரின் தலைமையில் நடாத்தப்பட்டது.

❖ **சர்வதேச புகைத்தல் மற்றும் போதைப்பொருள் ஒழிப்பு மாதத்தை பிரகடனப்படுத்தல்.**

அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் கட்டளையின் பிரகாரம் **போதையில் இருந்து விடுபட்ட நாடு** என்ற தேசிய வேலைத்திட்டத்தின் கீழ் 2017 மே மாதம் 31ஆம் திகதி அனைத்து மாவட்டங்களிலுமுள்ள பிரதான பள்ளிவாசல்களின் மூலம் மக்களுக்கு விழிப்பூட்டும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

பிலாஸ்திக் மற்றும் பொலித்தீன் பாவனையின் மூலம் சமூகத்தில் ஏற்படக்கூடிய நேரடி மற்றும் மறைமுகமான உடற் சுகாதாரம், சுற்றுச்சுழல் மற்றும் சமூகத் தாக்கங்களை குறைக்கும் வேலைத் திட்டத்தை அமுல்படுத்தல்

அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் வழிகாட்டலின்கீழ் சமய வழிபாட்டுத்தலங்களில் நடைபெறும் பொது நிகழ்வுகளில் பிலாஸ்திக் மற்றும் பொலித்தீன் பாவனையை முற்றாக தடைசெய்யுமாறு ஊர் மக்களுக்கு தெளிவுபடுத்தல்களை மேற்கொள்ளுமாறும், பிலாஸ்திக் மற்றும் பொலித்தீன் பாவனையை தடைசெய்யுமாறும் பள்ளிவாசல் நம்பிக்கையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

❖ **உலக சுற்றாடல் தின நிகழ்வுகள்**

அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் கட்டளைக்கமைய உலக சுற்றாடல் தினத்தைக் கொண்டாடுமுகமாக 2017 ஜுன் மாதம் ஐந்தாம் திகதி வரை காரியாலய அலுவலர்களை விழிப்பூட்டும் நிகழ்வுகள் இடம்பெற்றது.

❖ **ஏனைய அபிவிருத்தி வேலைத்திட்டங்கள்**

திணைக்கள வேலைகளை செற்றிறனாக்குதலின் நோக்கில் தேசிய உற்பத்தித்திறன் செயலக காரியாலயத்தின் அறிவுருத்தலின் மூலம் உற்பத்தித்திறன் வேலைத்திட்டம் செயற்படுத்தப்படுகின்றது.

## 10. உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு மற்றும் புலனாய்வு பிரிவால் செய்யப்படும் நடவடிக்கைகள்

திணைக்களத்தின் நிதி மற்றும் நிருவாக உள்ளகக் கட்டுப்பாட்டுக் கடமைகளை ஒழுங்காகப் பேணுவதற்கென கணக்காய்வு நடாத்தப்படுகின்றது.

- ❖ திணைக்களத்தில் நிதி மற்றும் நிர்வாக விடயங்களை பரீட்சித்து குறைபாடுகளை சரி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- ❖ கணக்காய்வு சார் வினாக்களுக்கு விடை அளித்தல்.
- ❖ பள்ளிவாசல்களைச் சோதனையிடுதல், பள்ளிவாசல்களின் வரவு செலவுக் கூற்றுக்களைக் கணக்காய்வு செய்தலும் புலனாய்வு செய்தலும்.
- ❖ வக்பு சபையினால் கிடைக்கப்பெறும் மனுக்கள் மற்றும் முறைப்பாடுகள் பரிசீலனை செய்யப்பட்டு அறிக்கை சமர்ப்பித்தல்.
- ❖ ஆண்டுக் கணக்குகளில் கணக்காய்வும் சோதனையும்

ஆண்டு 2017 அமைச்சின் உள்ளகக் கணக்காய்வு வினாக்களின் எண்ணிக்கை – 06
ஆண்டு 2017 கணக்காய்வாளர் அதிபதியின் கணக்காய்வு வினாக்களின் எண்ணிக்கை – 09

**11. திணைக்களத்தின் கடமைச் செயற்திறனுக்கு கெதிரான தடைகளும் இடர்களும்**

**ஆண்டு 2017.12.31 வரைக்கும் திணைக்களத்தின் மூலதனம் மற்றும் மீண்டுவரும் செலவினம் என்பன தொடர்பிலான பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது.**

| | **2017 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீடு** | | **31.12.2017 அன்றிலிருந்து மொத்தச் செலவினம்** | |
|---|---|---|---|---|
| | **ஆண்டு மதிப்பீடு ரூ** | **மொத்த நிகர ஏற்பாடு ரூ** | **செலவினம்** | **நூற்றுவீதம்** |
| மூலதனச் செலவினம் | 17,200,000.00 | 37,200,000.00 | 33,617,539.17 | 90.37% |
| மீண்டுவரும் செலவினம் | 80,685,000.00 | 109,085,000.00 | 93,919,015.32 | 86.10% |
| மொத்தம் | **97,885,000.00** | **146,285,000.00** | 127,536,554.49 | 87.18% |

மேலே காட்டப்பட்ட செலவின விபரங்களின் படி திணைக்கள செயற்திறன் திருப்திகரமான நிலையில் காணப்படுகின்றன. 87.18% செலவு காட்டப்பட்டுள்ளது. வேறு மூலதன செலவுகளின் கீழ் முஸ்லிம் கலாசார கட்டுமான செலவினத்தலைப்பின் கீழ் மூலதனம் எஞ்சியதன் காரணமாவது அதன்கீழ் முன்வைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்காக மாவட்ட செயலாளர்களுக்கு விடுவிக்கப்பட்டுள்ள ஒதுக்கீடு இல்லாத மற்றும் 2017.12.31 ஆம் திகதிக்கு செலுத்தப்படாத நிலுவைகளை பயன்படுத்தப்படாமை ஆகும். 2018 ஆம் ஆண்டில் அதன் ஒரு பகுதி செலுத்தப்பட்டுள்ளது. மேலும் பேரீத்தம் பழ செலவினத்தில் ரூ' 13.3 மில்லியன் எஞ்சியது அதற்காக வரி அறவிடப்படாமை ஆகும்.

திணைக்களத்தின் சகல மட்டங்களிலும் நிலவிய வெற்றிடங்கள் அதிலும் விசேடமாக நிறைவேற்றுத் தரத்திலான வெற்றிடங்கள் நிலவியமை திணைக்கள செயற்பாட்டு இலக்குகளை எய்துவதில் தடையாய் இருந்தது.

மேலே சொல்லப்பட்ட இடர்கள் மற்றும் தடைகளுக்கு மத்தியிலும் 2017 ஆம் ஆண்டின் குறிக்கோள்களை எய்துவதற்கும் இலக்குகளை அடைவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.


இணையதளம் www.muslimaffars.gov.lk

இலத்திரனியல் முகவரி dir@muslimaffairs.gov.lk

தொலைபேசி இலக்கம் பணிப்பாளர் - 011-2669994

அலுவலகம் - 011-2669997

தொலைநகல் இலக்கம் 011-2692147